தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஏரியூர், நெருப்பூர் மற்றும் செல்லமுடி ஆகிய பகுதிகளில் செயல்பட்டுவரும் பள்ளிகளில் 1,286 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இவ்வூர்களின் அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவுவரை விடுதிகள் எதுவும் இல்லை. எனவே, இப்பகுதியில் மாணவர் விடுதி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

209—

ஆரம்ப சுகாதார நிலையம்

***1141—திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, பள்ளப்பட்டி மற்றும் தெப்பகுளத்துப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 30 ஆயிரம்

2014 ஜூலை 21]

மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இரு சுகாதார மையங்களுக்கிடையே குறைந்தபட்சம் இடைவெளி 8 கிலோ மீட்டர் இருத்தல் வேண்டும். அந்தவகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அம்மையநாயக்கனூர், ஜக்கநாயக்கனூர், மட்டப்பாறை, சிறுநாயக்கன்பட்டி, எஸ். சிம்மாலப்பட்டி ஆகிய 5 இடங்களில் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றன. விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பள்ளப்பட்டி பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.*

திரு. ஆ. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதைக் கேட்டாலும் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளி, அள்ளிக் கொடுக்கக்கூடியவர். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதியான பள்ளப்பட்டி ஊராட்சி விரிவடைந்து கொண்டிருக்கின்றது. விரிவடையக்கூடிய ஊராட்சியாக இருப்பதால் பக்கத்தில் சுகாதார நிலையம் இருந்தாலும், அங்கே வயதானவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே ஒரு சுகாதார நிலையம் அமைத்துக் கொடுங்கள் என்று என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அதனால்தான் இன்றைக்கு இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கோட்டை, நிலக்கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது சுகாதார நிலையம் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அள்ளிக் கொடுக்கின்ற ஆட்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி இருப்பது என்பது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில்தான் கடந்தகால ஆட்சியிலே, கடந்த 5 ஆண்டுகளிலே மொத்தம் 168 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, கடந்த 3 ஆண்டுகளிலே மட்டும் இதுவரை 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 134.5 கோடி ரூபாய் செலவிலே தொடங்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது வயதானவர்கள் வருவதற்கு சிரமமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இதுபோல வயதானவர்கள் சிரமப்பட்டு வர வேண்டாம் என்பதற்காக இன்றைக்கு மருத்துவமனையை நாடி மக்கள் வருவதைக் காட்டிலும், நோயாளிகளை, மக்களை நாடி மருத்துவச் சேவை சென்று கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உறுதிபடுத்துகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டத்திலே மட்டும் 7 நடமாடும் மருத்துவக் குழுக்கள் மிகச் சிறப்பாக கிராமப்புறங்களிலே மருத்துவச் சேவையை உறுதிபடுத்திக் கொண்டிருக்கின்றன. அவர் குறிப்பிடுகின்ற பள்ளப்பட்டி பகுதியினுடைய மக்கள்தொகை என்பது 5,925. அங்கே ஏற்கெனவே ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம்*—Health Sub Centre *இயங்கிக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, அவருடைய வலியுறுத்தலின்பேரிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.*

2014 ஜூலை 21]

திரு. ஆ. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை அம்மா அவர்களுடைய கோட்டை என்று சொல்வதற்கு நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்தத் தொகுதிதான் அதிகமான ஓட்டை வாங்கிக் கொடுத்துள்ளது என்பதை நினைவு கூர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

(முற்பகல் 11–10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், நிலத்தடி நீரின் அளவை அதிகப்படுத்தவும் நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி, திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. கு. லிங்கமுத்து, திரு. பி.எல். சுந்தரம், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. அர. சக்கரபாணி, திரு. எ.வ. வேலு, திரு. அ. சௌந்தரபாண்டியன், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா, திரு. எல். வெங்கடேசன், திரு. எஸ்.ஆர். பார்த்திபன், திரு. ஆர். அருள்செல்வன் மற்றும் திரு. எஸ். செந்தில்குமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்